மெய்கண்டார் கழக வெளியீடு—௪௨.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



காஞ்சிப்புராண ஆசிரியர்,

மாதவச் சிவஞான யோகிகள் அருளிச் செய்த

# கச்சி ஆனந்த ருத்திரேசர் திருப்பதிகம்.

1950.

சிவஞான



சுவாமிகள்

# ஆனந்த ருத்திரேசர் திருப்பதிகம்

ஐந்தையா றினைய டக்கி அருந்தவம் புரியா ரேனும்
வந்தையா வெனவெல் லோரும் வணங்கிட வாழ லாமால்
முந்தையா றிரண்டு தன்ம முதல்விசெய் மூதூர் வாழும்
எந்தையா னந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே. 1

குடங்களிற் பணைத்த னுத்த கொங்கைமால் களிறு மல்குற்
படங்களுங் கொடுமின் னார்செய் பருவரல் பாற்ற லாமால்
மடங்களைந் தறிவான் மிக்க மாதவர் மனம்போற் காஞ்சி
இடங்கொளா னந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே 2

வருந்தலா தெண்ணெண் கல்வி வாய்க்குமெண் செல்வப் பேறு
பொருந்தவா யுகங்க ளூறும் புகழுடன் பொலிய லாமால
திருந்தவால் வளையு முத்துஞ் செய்தொறுஞ் செறிதென் காஞ்சி
இருந்தவா னந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே 3

பொறைதவ மறிவொ ழுக்கம் புத்திர மித்தி ராதி
குறைவறு செல்வம் யாவும் குலவவீற் றிருக்க லாமால்
மறையொலி முரசந் துஞ்சா வளநகர்க் காஞ்சி வாழும்
இறைவனா னந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே. 4

ஆசைவே ரகழ்ந்து வெண்ணீ றஞ்செழுத் தக்க மாலை
பூதியுச் சரித்துப் பூண்ட புனிதரோ டிணங்க லாமால்
யோசனை கமழுய் யான முடுத்திடுங் காஞ்சி யூர்வாழ்
ஈசனா னந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே. 5

பானந்தங் கையி லேந்தும் பைந்துழாய் மார்பன் முன்னும்
வானந்தங் கமரர் யாரும் வணங்கவாழ்ந் திருக்க லாமால்
கானந்தண் பொழிலி லாறு கால்செயுங் கச்சி மூதூர்
ஆனந்த ருத்தி ரேச னடித்துணை இறைஞ்சி னோர்க்கே. 6

கங்கணான் குள்ளான் முன்னுங் கருமமுங் காரா னூர்தி
செங்கையார் பாசந் தன்னாற் சிமிழ்த்தலுந் தீர லாமால்
அங்களா லுயர்ந்த காஞ்சி அகநக ரமர்ந்து வாழும்
எங்களா னந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே. 7

விழிகளான் மாதர் நாளும் விளைத்திடும் வேட்கை யாய
குழிகளா டுற்று வீழுங் கொடுந்துயர் குமைக்க லாமால்
வழிகளார் சோலை சூழ்ந்த மாமதிற் கச்சி வாழும்
எழில்கொளா னந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே 8

இருக்கெலா மளவிட் டின்னும் இனைத்தென அறிய எட்டாத்
திருக்குலா வியபே ரின்பச் செழுங்கடல் திளைக்க லாமால்
மருக்கலா ரங்கண் மொய்த்த வாவிசூழ் காஞ்சி வாழ்வுற்
றிருக்குமா னந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே. 9

மாக்தளி ரியலார் செம்பொன் மண்ணெனு மார்வ வாதி
நீந்திமே லான முத்தி நீள்கரை ஏற.லாமல்
காந்துபொன் மாடஞ் சூழ்ந்த கச்சியம் பதிவாழ் கங்கை
ஏந்துமா னந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே. 10

ஆனந்த மலைபோ லோங்கும் அம்பலத் துமையாள் நங்கை
ஆனந்த மகிழ்ச்சி பூப்ப ஆனந்த வமிழ்த மூறி
ஆனந்த நிருத்தஞ் செய்யும் அங்கணன் கச்சி மூதூர்
ஆனந்த ருத்தி ரேசன் அடியிணைக் கன்பு செய்வாம். 11

திருச்சிற்றம்பலம்.

சிவஞான யோகிகள் திருவடிகள் வாழ்க

**சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக.**

உ

## மாதவச் சிவஞான சுவாமிகள் வணக்கப்பாடல்

கலைதேர் நமச்சி வாய்குரு
கருணைக் கடலில் திளைத்தாடிக்
கலகப் பாசத் தொடரறுத்துக்
காமத் தறியை அறவீழ்த்தி
அலையுஞ் சமயத் தருக்களைக்கீழ்
அடி வேரோடும் அகழ்ந் தெறிந்திட்டு
அருளின் படாத்தை முகமேற் கொண்டு
ஆதிவேதா கமங்களெனும்
தொலையா மணிகள் இருமருங்குந்
தொனிக்கச் சைவ மதம் பொழித்து
துங்கமோடும் உலக முற்றுஞ்
சுற்றும் வெற்றி வாரணமே
மலையா தருளும் முனிவர்சிகா
மணியே வருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான
வள்ளால் வருக வருகவே.

உ

சிவமயம்

# இவ் வெளியீடு

காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைக் கல்விக்கூடத்

தமிழாசிரியர், வித்துவான்

## திரு. பூசை. ஆ. நமச்சிவாய முதலியாரவர்கள்

பொருளுதவியால் அச்சிட்டு

## மெய்கண்டார் கழகத்தின

ஆறுவது யாத்திரை ௫௨-வது கிழமை

விக்குருதி கார்த்திகை கக ஞாயிறு வழிபாட்டினன்று

பிள்ளையார்பாளையம் அக்கண்ம்பாளையத் தெரு

**ஆனந்தருத்திரேசர்திருக்கோயிலில்** அன்பர்களுக்கு வழங்கியது

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக.

ஸ்ரீநிலயம் பிரஸ், காஞ்சிபுரம்.